ஓம் சாயி ராம்

# சாயி மார்க்கம்

**இலங்கை ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின்**
**காலாண்டு இதழ்.**

லர் 1 ஐப்பசி, கார்த்திகை, மார்கழி - 1994. இதழ் 1

## பொருளடக்கம்


| | |
|---|---|
| பிரார்த்தனை & அருளாசி | 1 |
| பாலத்தைக் கடவுங்கள் | 2 |
| எனது கருவிகளாக நீங்கள் செயற்படுங்கள் - பகவானின் அருளுரை | 3 |
| காலமும் தூரமும் ஒரு பொருட்டல்ல எமது சாயீசனுக்கு | 5 |
| மனித [illegible]ழ்வுக்கு நம்பிக்கை அவசியம் | 7 |
| மேலா[illegible] நண்பன் யேசு, சாயி கீதம் | 8 |
| விண்[illegible]ரயம் செய்யாதே | 9 |
| ஆசியுரைகள், புதிய புத்தகங்கள் | 10 |
| இயற்கையின் அற்புதங்களுக்கெல்லாம் அற்புதம் பெண்களே | 12 |
| நூல் அறிமுகம் | 13 |
| மாணவர் பகுதி - நல்ல நாக்கு, தீய நாக்கு, வினா விடை | 14 |
| உங்க[illegible]து வாழ்க்கைதான் எனது செய்தி | 16 |
| ஆன்மக சாதனை 1994 | 18 |
| நிறுவ[illegible] செய்திகள் | 19 |
| அ[illegible]யுங்கள் நண்பர்களே | பின் அட்டை உட்புறம். |



வருடச் சந்தா ( தபாற் செலவுடன் )

இலங்கையில் ரூ. 80/-


வெளிநாடுகள் U. S. $ 7/-

காசோலை, பணக்கட்டளைகள்: 'வடபிராந்திய சத்ய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு' என்ற பெயரில் எழுதப்பட்டு ஆசிரியர் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.



சகல தொடர்புகளும்

ஆசிரியர், சாயி மார்க்கம்
DR. எம். கே. முருகானந்தன்
மருதடி – பருத்தித்துறை,
ஸ்ரீலங்கா.



## சுவாமியிடம் ஓர் பிரார்த்தனை

''எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்மு னிங்கு
நசித்திடல் வேண்டு மன்னாய்''

(சுப்பிரமணிய பாரதியார்
அன்னையை வேண்டல்.)

## சுவாமியின் அருளாசி

உங்கள் மனதில் மீள மீள எழுந்து கொண்டிருக்கும் பற்றுக்களை, அவை ஒவ்வொரு முறையும் வெளிப்படுகையில் என்னிடம் கொண்டு வாருங்கள். அவை எனக்கு அதிர்ச்சியளிக்கமாட்டா. ஏனெனில் நானே அவற்றைச் சங்கற்பித்துள்ளேன்.

உங்களது குழப்பம், உங்களது பயம், உங்களது துடிதுடிப்பு, உங்கள் ஆவல், உலகத்தோடு அன்பு கொள்ள முடியாத உங்கள் நிலை, சேவை செய்ய நீங்கள் தாமதிப்பது, உங்களது பொறாமை, உங்கள் சாதனையைக் குலைக்கும் குறைபாடுகள் எல்லாவற்றையும் என்னிடம் கொண்டு வாருங்கள்.

இவ்வாறு உலகச் சுழற்சியில் நீங்கள் அகப்பட்டிருப்பினும், லௌகீக வேதனையென்னும் ஆழ் கிணற்றினுள் நீங்கள் வீழ்ந்திருப்பினும் உங்களைக் காக்குமாறு இறைவனை நோக்கி உங்கள் சக்தியெல்லாவற்றையும் திரட்டி இதயபூர்வமாகக் கூக்குரலிடுங்கள். அரை மனதுடனோ, மெல்லிய குரலிலோ முணுமுணுப்பதில் பயனேதுமில்லை.

இதயத்தைப் பிழிந்து கொண்டு பிரார்த்தனை எப்போது வெளிப்படுகிறதோ அப்பொழுது உதவி திடமாகக் கிடைக்கும்.

சத்ய சாயி பாபா
(சாயியுடன் தெய்வீகத்தை நோக்கி)

# பாலத்தைக் கடவுங்கள்

## பகவானின் ஒரு முக்கிய செய்தி

இவ்வாண்டு (சித்திரை 1994 – பங்குனி 1995) தனது பக்தர்களுக்கு மிகவும் சிறப்பான ஆண்டாக அமையப் போவதாக பாபா நேர்முக உரையாடல் ஒன்றில் கூறியுள்ளார். பிரார்த்தனைகளோ, சடங்குகளோ செய்யாமலேயே பாபாவின் தெய்வீகப் பிரேமையை அனுபவிக்கும் நல்லதொரு வாய்ப்பினை (அவரது பக்தர்களுக்கு) அளப்பரிய அருள்மழையாக பாபா இவ்வாண்டில் பொழிகின்றார். அவர்கள் வேண்டியவற்றை வேண்டியவாங்கு அளித்து அவர்கள் தன்னை நெருங்கி வரும் வழியையும் காட்டுவார்.

---

*சடங்குகளோ, பிரார்த்தனைகளோ இன்றி பாபாவின் அருளைப் பெறும் வழி.*

---

தனக்கும் தனது பக்தர்களுக்கும் இடையேயுள்ள தூரம் ஒரு ஆறு போன்றது. ஆற்றினைக் கடக்க அவர்களுக்கு ஒரு பாலம் தேவை. இந்தப் பாலமானது ஏழு செயற்பாடுகளால் ஆனது. ''இச்செயற்பாடுகளை நீங்கள் சாதனையாகச் செய்ய, எனக்கும் உங்களுக்கும் இடையேயான பாலம் இயல்பாகவே உருவாகிவிடும்'' என்கிறார்.

பகவானின் பக்தர்கள் என்ற முறையில் அவருக்கு நீங்கள் சமர்ப்பிக்க வேண்டிய ஏழு செயற்பாடுகளாவன:-

1) அகங்காரத்தை அழியுங்கள்.
2) சகிப்புத் தன்மை – எத்தகைய சூழலிலும் அன்பு செலுத்துதல்.
3) எப்பொழுதும் சாந்தமாக இருங்கள். நீங்களும் புன்னகைத்து மற்றவர்களையும் புன்னகை பூக்க வையுங்கள்.
4) பொறுமையைக் கடைப்பிடியுங்கள்.
5) மற்றவர்களுக்கு உதவும் வாய்ப்பினைத் தேடிக் கொள்ளுங்கள். எங்கிருந்த போதும் சேவை செய்யுங்கள்.
6) எப்பொழுதும் மன்னியுங்கள்.
7) உங்களில் உள்ளுறையும் இறைவனில் பக்தி கொள்ளுங்கள்.

பகவானது ஆசியைப் பெறுவதற்கு, இவற்றை உங்களது நாளாந்த வாழ்வில் கடைப்பிடித்தாலே போதுமானது என பகவான் கூறுகிறார். எனவே இந்த ஆண்டினைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

---

இறைவன் உங்களுக்கு ஒரு சுத்தமான தூய்மையான கண்ணாடி கொடுத்திருக்கிறான். அதுவே உங்கள் புத்தி. இதில் உங்கள் முகத்தைப் பார்த்து ரசிக்காமல் மற்றவர்களை நோக்கிக் கண்ணாடியைத் திருப்பி வைத்திருக்கிறீர்கள். நீங்கள் ஆத்ம தரிசனம்பெற விரும்பினால் இந்தக் கண்ணாடியை உங்கள் முகத்தின் எதிரில் வைத்துக் கொள்ளுங்கள்.

— பாபா —

பகவானின் அருளுரை

## எனது கருவிகளாக நீங்கள் செயற்படுங்கள்.

'உங்களது பணி ஆரம்பமாகி விட்டது' இதுதான் நான் உங்களுக்குக் கூறுகின்ற வார்த்தை. எனது பக்தர்களே! இவ்வுலக வாழ்க்கையில் நீங்கள் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய தனித்துவமானதும், மதிப்பிற்குரியதுமான பங்கு ஒன்று உண்டு. என்னால் அழைக்கப்பட்டவர்கள்தான் எனக்குச் சேவை செய்ய முடியும்.

நீங்கள் ஒவ்வொருவரும் உடனடியாகச் செயலில் இறங்க வேண்டிய காலகட்டத்தினை எனது பணி அடைந்துள்ளது. நட்சத்திரக் கூட்டத்தின் நடுவே நிற்பதற்கு பூமி என்ற இந்தக் கோளுக்கு நோக்கம் ஒன்று உள்ளது. அந்த நோக்கம் உங்கள் கண் முன்னே இப்பொழுது விரிந்து வெளிப்படுகிறது. உங்கள் இதயத்தில் நிறைந்து கிடக்கும் பக்தியினை வெளிக்கொணர்ந்து பரப்புமாறு உங்களை அழைக்கின்றேன். அவ்வாறு செய்தால்தான் புலனாகாது கிடக்கும் அச்சக்தி உங்கள் வட்டத்திற்குள் வரும் எல்லோரையும் சூழ்ந்து கொள்ளும். உங்கள் பங்கினை, பணியினை, திறம்பட ஆற்ற வேண்டுமாயின் என்னில் எப்பொழுதும் மையம் கொண்டு செயற்படுங்கள். உங்கள் உள்ளங்களில் உறைந்துள்ள புனித இதயமானது எல்லா மனித இனங்களையும், எல்லா உயிரினங்களையும் சென்று அடையுமாறு அர்ப்பணித்து விடுங்கள். உங்கள் பணியின் பலாபலன்களைப் பெறுவதற்கு எண்ணாதீர்கள்.

எனது பணியின் இப்பங்கு ஆரவாரமின்றி அமைதியாகவே நடைபெறுகின்றது. எனது பிரேமை ஊற்றெடுத்துப் பாயும் எனது கருவிகளாக நீங்கள் இருக்கின்றீர்கள். எப்பொழுது அகங்காரம் உங்களில் படிய இடமளிக்கிறீர்களோ அக்கணமே என் அருட்பணி நின்றுவிடும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். என்று நீங்கள் உங்கள் எதிரிடையான அலட்சிய மனப்போக்கை வெற்றி கொள்வீர்களோ அன்றே நீங்கள் மறுபடியும் எனது பிரேமையின் ஊற்று ஆவீர்கள்.

எனது பிரேமையின் பெருக்கம் உலகம் பூராவும் உணரப்படும். பல அவதாரங்களினூடாக உங்களை நான் இப்பணிக்காக தயார்ப்படுத்தியுள்ளேன். உங்களை என்பால் ஈர்த்துள்ளேன். முன்னைய அவதார காலத்தில் எனது பணியில் பெரும் வெற்றி கண்டுள்ளேன். எனது பணியோ முடிவில்லாதது. அவ்வாறே உங்களது பணிக்கும் முடிவில்லை. நான் உங்கள் உள்ளும், புறத்தும், கடந்தும் நிற்கின்றேன் என்பதை உணருங்கள். அங்கு வேறுபாடே கிடையாது. உங்களிடமிருக்கும் அற்பத்தனங்களை என்றைக்கும் அறவே அகற்றி விடுங்கள். இப்பொழுது நீங்களே நான். நானே நீங்கள். இங்கு எந்த வேறுபாடும் கிடையாது. உங்களை நோக்கியும், உங்களுக்கும், உங்கள் ஊடாகவும் எனது தரிசனம் எங்கும் பாய்ந்து பரந்து நிற்கும்.

---

*நீங்கள் ஒவ்வொருவரும் உடனடியாகச் செயலில் இறங்க வேண்டிய காலகட்டத்தினை எனது பணி அடைந்துள்ளது.*

---

இந்தத் தொடர்ச்சியான நிகழ்வுபற்றி உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். என்றும் பரிசுத்தமான இதயத்தையும், ஆன்மாவையும் கொண்டு இருங்கள். உங்கள் தனித்துவமான பண்புகளிலிருந்து உங்கள் வாழ்நாளிலேயே மனித இனம் நலன் அடையும்.

நான் ஈர்த்த போதெல்லாம் மற்றையவர்களும் கூட எனது இப்பணியில் கலந்து கொள்வர். மனித இனம் முழுவதும் இணக்கத்துடன் வாழும் காலம் அண்மித்துக் கொண்டிருக்கிறது. எவரும் எதிர்பார்ப்பதற்கு முன்னரே விரைவில் அக்காலம் கை

நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் அமைதியான பணிகளைத் தொடர்ந்து செய்யும் போது உங்களை நான் என் இதயத்தால் ஆரத்தழுவி நிற்பேன். அன்றிலிருந்து உங்கள் ஆன்மா உயர்வடையும். உங்கள் கண்கள் உங்களுக்குள் இருக்கும் எனது சாந்நித்தியத்தைக் காட்டி நிற்கும். எல்லா பிரபஞ்சங்களும் ஒன்றே எனக் காட்டும் கடவுளின் மலையுச்சியிலிருந்து இதனை நான் எனது பக்தர்கள் எல்லோருக்கும் தெரியப்படுத்துகிறேன்.

*பணிகளைத் தொடர்ந்து செய்யும்போது*
*உங்களை என் இதயத்தால் ஆரத்தழுவி நிற்பேன்.*

கூடி விடும். பிரபஞ்ச வாழ்க்கையின் உண்மை நோக்கத்தினை ஒவ்வொரு உயிரினத்திற்கும் உணர்த்துவதற்கு என்னென்ன வேண்டியுள்ளதோ அவற்றை அக்காலம் வருவதற்கு முன் தயார் செய்து கொள்ளுங்கள். உயிரோடு இருப்பவர்கள் எவருமே கற்பனை செய்து பார்க்கக் கூடியது அல்ல இது. அது அவர்களால் முயன்று அடையப் படக் கூடியதுமன்று. எல்லா அறிவுணர்வுகளையும் கடந்து நிற்பது. அதன் அழகு எல்லாக் கனவுகளையும் விட மகத்துவமானது என்றுதான் நான் சொல்ல முடியும்.

எனது அருமைப் பக்தர்களே! எனது பணியில் ஈடுபடுங்கள். சுவர்க்கத்தின் மலர்களிலிருந்து வெளிப்படும் நறுமணத்தை உங்கள் மூச்சு சுமந்து வரும். தேவ தூதர்களின் முன் மாதிரியே உங்களுக்குச் சான்றாகும். உங்கள் இன்பமே எனது இன்பம்.

நன்றி:- ஸ்ரீ சத்ய சாயி மையம்
*(South all) London*

SRI SATYA SAYI CENTRE SOUTH ALL
5. MEADOW ROAD
SOUTH ALL
MIDDEX
LONDON
U. K.

# காலமும் தூரமும் ஒரு பொருட்டல்ல

## எமது சாயிசனுக்கு

இரு முதிய பெண்கள். அவர்கள் இருவரும் சாயி பக்தர்கள். அநாதை இல்லத்தில் வாழும் குழந்தைகளை வளர்க்கும் சேவாத் தொண்டு செய்பவர்கள்.

அன்று காலநிலையும் சீராக இருந்தது. சூரியன் பிரகாசிக்கும் கோடை காலம். வானொலியும், தொலைக்காட்சியும் வானிலை அன்று நன்றாக இருக்குமென அறிவித்தன. எனவே பொழுது போக்கிற்காக அன்று அமெரிக்க நெடுஞ் சாலையில் காரோட்டிச் சென்றனர். வெப்பமாக இருந்ததால் மெல்லிய உடையே அணிந்திருந்தனர். பிற்பகல் ஆக திடீரென வானம் கறுத்து மழை பெய்யத் தொடங்கியது. அதன் பின் பனி கொட்ட ஆரம்பித்தது. பனியில் காரை ஓட்டி வீடு திரும்ப முடியாத நிலையில் அவர்கள் அருகில் உள்ள விடுதியில் தங்க உத்தேசித்தனர். ஆனால் விடுதிகள் யாவற்றிலும் 'இடமில்லை' என்ற அறிவித்தல்களே காணப்பட்டன.

காரோட்டுவது மேலும் சிரமமானபடியால் 'இடமில்லை' என்ற அறிவித்தல் இருந்தும் வேறு வழியில்லாததால் காரைச் கொண்டு அருகே தென்பட்ட விடுதியில் நுழைந்தனர். வாகனம் தரிக்கும் இடங்கள் யாவும் போக்குவரத்து பஸ்களும், பாரமான லொறிகளும் நிரம்பி வழிந்தன. வீதியிலும் கடும்பனி. வீதி மூடப்பட்டது என அறிவித்தல் காட்டியது. இந்தப் பெண்மணிகள் விடுதி வாயிலில் காரை நிற்பாட்டி விட்டு இறங்கி அன்றிரவு விடுதி விறாந்தையிலாவது தங்க இடம் கிடைக்குமா என வினாவுவதற்காக உள்ளே சென்றனர். விறாந்தை முழுவதும் சூதாட்டக்காரரும், லொறி, பஸ் சாரதிகளும் குடித்துக் கொண்டும், புகைத்துக் கொண்டும், சூதாடிக் கொண்டும், அவர்கட்கேயுரிய கரடு முரடான பெரிய தொனியில் சப்தமிட்டுக் கொண்டும் இருந்தனர். இப்படியான ஆண்கள் நிறைந்த சூழலில் மாட்டிக் கொண்டோமே எனத் தவித்தனர்.

தங்களுடைய மொழியைப் புரிந்து, தங்கள் துன்பத்தைப் பற்றி செவிமடுத்து கேட்கக் கூடிய யாராவது ஒருவர் இச் சூழலில் இல்லையா என சுற்றுமுற்றும் பார்த்த போது, பணம் பெறுமிடத்தில் கறுத்த தலைமுடியுடன் இளம் பெண்ணொருத்தி உட்கார்ந்திருப்பதைக் கண்டனர். பணம் பெறும் விடுதி உத்தியோகத்தர் போன்றிருந்தது அவள் தோற்றம். அவளருகே சென்று தாம் இரவு தங்குவதற்கு ஓர் அறையை அல்லது படிகளில் இருந்தாவது இரவைக் கழிப்பதற்கு ஒரு தலையணையாவது தருமாறு அவளிடம் கேட்ட போது எதிர் மறையாகவே விடை கிடைத்தது. இதற்கிடையில் பாதுகாப்பு உத்தியோகத்தரின் சீருடை அணிந்திருந்த ஒருவன் இப் பெண்மணிகளை நெருங்கி வந்தார். பாதையில் நிற்கும் இவர்களது கார் பிரதான வாயிலை தடை செய்வதால் உடனடியாக எடுக்குமாறு கட்டளை இட்டான். குளிர் உடையின்றி காரை நிறுத்த இடம் தேடிப் பனியில் செல்ல இவர்கள் தயங்கினர். ஏமாற்றமும், கவலையும், விரக்தியும் அடைந்த இருவரும் சாயி பகவானின் உதவி கோரிப் பிரார்த்தித்தனர்.

பணம் பெறுமிடத்தில்
கறுத்தத் தலைமுடியுடன்
இளம் பெண் ஒருத்தி.

அவர்களது உறுதிப்பாட்டைகண்ணுற்ற காவலாளி மீண்டும் இவர்களிடம் வந்து காரை நிற்பாட்ட ஒரு இடம் தான் கண்டு பிடித்துள்ளதாகத் தெரிவித்தார். பொது நடனசாலை உரிமையாளர் கடும் பனி காரணமாகக் காரில் வராததால் வாகன சாலை பூட்டித் திறப்புடன் இருப்ப தாக கூறினார். அதில் காரை நிறுத்து மாறு இவர்களிடம் திறப்பைக் கொடுத் தார். வாகனசாலைத் திறப்பை அடுத்த நாள் காலை நடனசாலை உரிமையாளரி டம் கொடுக்குமாறும் கூறினார். அது சுவாமியின் பேரருளே! காரை நிறுத்தி விட்டு திரும்பவும் விறாந்தைக்கு வந்த பெண்மணிகள் வாகனசாலையைத் தந்து அருளியதற்கும் இரவை இலகுவாகவும், பாதுகாப்பாகவும் கழிக்க உதவியதற்கும் பகவானுக்கு நன்றி கூறித் துதித்தனர்.

சிறிது நேரத்தில் பணம் பெறுமிடத் தில் இருந்த பெண் இவர்களை அழைத்து விடுதி உரிமையாளரின் அறை மேலே காலி யாக இருப்பதாகவும், அந்த அறையைத் தருவதாகவும் ஆனால் எவருக்கும் இது பற் றிக் கூற மாட்டோம் என உறுதியளித் தாலே தரமுடியும் என்றாள். இல்லாவிடின் தனது வேலையை இழக்க நேரிடும் என்றும் கூறினாள். பாதுகாப்பு உத்தியோகத்தனை அழைத்து அந்த அறையை காண்பிக்குமாறு கேட்டுக் கொண்டாள். அங்கு சென்றதும் ஐந்து நட்சத்திர விடுதியிலும் கிடைக்காத பொருத்தமான சிறப்பான இடம் கிடைத் திருப்பதைக் கண்டனர். அவர்கள் நன்கு குளித்து, தொலைக்காட்சி பார்த்து விட்டு இரவு முழுவதும் அங்கே நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும் அயர்ந்து நித்திரை கொண் டனர். அடுத்த நாட் காலை பணம் பெறும் இடத்திலிருந்த பெண்ணுக்கு நன்றி கூறக் கீழிறங்கி வந்தனர். அவளை எங்கேயும் கண்டு பிடிக்க முடியாமற் போனது. அந்த விடுதியில் காசாளராக என்றுமே பெண் களை வேலைக்கு அமர்த்தியது கிடையாது என்றும் சீருடையுடன் பாதுகாப்பு உத்தி யோகத்தர் என்றுமே வேலை செய்வதே இல்லை என்றும் விசாரித்த போது அறிந்து கொண்டனர்.

அவர்களால் நம்பவே முடியவில்லை! காசாளர் பெண்ணுடனும், சீருடைப் பாதுகாப்பு உத்தியோகத்தருடனும் முந்திய இரவு பல தடவை தாம் கதைத்ததாக வாதாடியும் பார்த்தனர். அப்பொழுதும் அதே விடைதான் கிடைத்தது. ஆச்சரிய மும், குழப்பமும் அடைந்த அவர்கள் தாம் தங்கிய அறையை போட்டோ எடுக்க மேலே சென்றனர். அங்கும் ஓர் ஆச்சரியம் காத்திருந்தது! அப்படி ஒரு அறையே அங்கு இல்லை. அவர்கள் தங்கிய அறை இனி மேலும் அங்கே இருக்க முடியாது! என் பதைப் புரிந்து கொண்டனர்.

சுவாமி தனது அருமைப் பக்தர்களுக் காக பாதுகாப்பான வசதியான அறையை இரவு படைத்துக் கொடுத்தாரா? அவர் கள் அறையை விட்டு நீங்கியதும் அதனை மறையச் செய்தாரா? புட்டபர்த்தியில் இருந்து பூமியை அரை வலம் கடந்து அமெ ரிக்கா வந்தது மாத்திரமன்றி ஒரே சமயத் தில் பணம் வசூலிக்கும் பெண்ணாகவும், சீருடை தரித்த பாதுகாப்பு உத்தியோகத் தராகவும் அங்குள்ள ஏனையவர்கள் கவ னிக்காத வகையில் தோன்றினாரா?

ஒரு கடவுள் அவதாரத்தாலேயே இப் படியான அற்புதங்களைச் செய்ய முடியும். வேண்டுவோருக்கு வேண்டுவதை அருள முடியும். அவர்களின் அற்புதமான தன்ன லமற்ற சேவைத் தொண்டு என்னும் சாத னையினால் மனமகிழ்ந்த சுவாமி அன்றிரவு அவர்கள் விடுதியில் தங்குவதற்கு முடியா மல் ஏற்பட்ட சிக்கலை நிவர்த்தி செய்து அற்புதமான லீலைகள் புரிந்து ஒரு நாட கமே அந்த விடுதியில் நடத்தி முடித்தாரா?

ஆதாரம்:- சம்பந்தப்பட்ட சாயி பக் தைகளின் விவரண ஒலிப் பதிவு நாடாவிலிருந்து

தொகுத்தளித்தவர்:- G. கருணாகரன்
சாயிவாஹினி சிங்கப்பூர் 1993 சுவா மியின் 68 வது பிறந்ததின விசேட வெளியீட்டு மலர்

தமிழில்:- செல்வி: த பத்மாசனி.

# மனித வாழ்வுக்கு நம்பிக்கை அவசியம்

இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது யப்பானியரால் குண்டுகள் போடப்பட்டன. இந்திய போர்வீரரை ஏற்றிச் சென்ற நீராவிக் கப்பல் ஒன்றும் குண்டு வீசப்பட்டு மூழ்கியது. பலர் அதில் இறந்தனர். ஐந்து மனிதர்கள் மட்டும் அந்த அலைபாயும் கடலில் தங்கள் உயிரைக் காப்பாற்றும் சந்தர்ப்பம் பெற்றார்கள். அவர்கள் பல மணித்தியாலங்களாக அங்கும், இங்கும் மேலும் கீழுமாக அலைகளால் அள்ளுண்டார்கள். அவர்களில் ஒருவன் நம்பிக்கையிழந்தவனாக ''இந்தக் கடல் என்னை விழுங்கிவிடும். நான் சுறாவிற்கு உணவாவேன்'' என்று அழுது கொண்டே பயத்தினால் கடலினுள் விழுந்தான். இன்னுமொரு போர்வீரன் தன் குடும்பத்தை நினைத்து ''அவர்கள் அதிகம் கஷ்டப்படப் போகிறார்கள். எதுவித ஒழுங்குகளும் அவர்கள் எதிர்காலத்திற்குச் செய்யாமல் நான் இறக்கிறேன்" என்று அழுதான். அவனும் தான் உயிர்பிழைப்பேன் என்பதில் நம்பிக்கையற்று தனது இறுதி மூச்சை விட்டான்.

மூன்றாமவன் ''ஆ! என்னுடைய இன்சூரன்ஸ் பொலிசி தஸ்தாவேயுக்கள் எல்லாம் என்னிடம் இருக்கின்றன. இவற்றை எனது மனைவியிடம் கொடுக்கவில்லை. நான் இறந்து கொண்டிருக்கிறேன், அவள் எப்படி இதற்கான தொகையைப் பெறுவாள்?'' என்று சொல்லிக் கொண்டே இறந்தான். மற்ற இரு மனிதர்களும் தங்கள் நம்பிக்கையை மேலும் பலப்படுத்திக் கொண்டு ''நாங்கள் எங்கள் உயிரை பிடித்திருந்து, இவ்வளவு நம்பிக்கை இல்லாத சூழ்நிலையிலும் இறைவன் எம்மை ஏதோ ஒரு நல்ல காரணத்திற்காகவே படைத்திருக்கிறான் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். நாங்கள் இறைவனுடைய சக்தியிலும் இரக்கத்திலும் எங்களுக்கு இருக்கும் நம்பிக்கையை விட மாட்டோம்.'' என்று கூறிக் கொண்டு தங்களுடைய உடைந்த கப்பலை விட்டு கரையை நோக்கி நீந்தினர்.

ஐந்து நிமிடம் கூட ஆகியிராது. மூழ்கிக் கொண்டிருந்த நீராவிக் கப்பலிலிருந்து பெற்ற சமிக்ஞையினால் உதவிக்காக வந்த ஹெலிகப்டர் இவர்களைக் கண்டு தன்னுள் பாதுகாப்புக்காக எடுத்துக் கொண்டது. கரையில் பாதுகாப்பாக இறங்கியதும் அவர்கள் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே ஐந்து நிமிடங்கள் தான்'' என்று கூறினர்.

நம்பிக்கை சக்தி வாய்ந்தது. நம்பிக்கை இல்லாத வாழ்க்கை பிரயோசனமற்றது. நம்பிக்கை பலத்தைக் கொடுக்கும். மனிதனின் ஒவ்வொரு துறையிலும் நம்பிக்கை இருக்க வேண்டும். நம்பிக்கையும் பலமும் அறிவைத் தரும். அறிவால் நாம் மெய்யறிவைப் பெறலாம்.

*Sai Speaks vol xi Page 108*

தொகுப்பு:- ஸ்ரீ S. R. சரவணபவன்

* * * * * * * * *

தன்னம்பிக்கையே அஸ்திவாரம். இந்த அஸ்திவாரத்தில் எழுப்பப்படும் சுவர்களே சுயதிருப்தி. சுயநல தியாகமே மேலே வேயப்படும் ஓடு. இவை மூன்றும் இருந்தால்தான் அதில் வசிக்க முடியும். அதுவே தனது உண்மையை உணர்தல். இதுவே மெய்யுணர்வு எனப்படுவது. ஆகவே நம்பிக்கையே எல்லாவற்றுக்கும் ஆதாரமானது. நம்பிக்கையின் அடிப்படையிலேயே, அதன் பலத்திலேயே வாழ்க்கை வாழ்வதே சரியான வழி.

— பாபா —

* * * * * * * * *

சர்வ தர்ம ப்ரிய தேவா சத்ய சாயி தேவா சர்வ தர்ம ப்ரிய தேவா சத்ய சாயி தேவா

# மேலான நண்பன் யேசு



எரிகோ நகரிற்கு வருகிறார் இயேசு. அவரைக் காண எல்லோரும் ஓடினார்கள். ஆனால் சக்கேயுவுக்கு ஒரு பிரச்சினை. அவனும் இயேசுவைக் காண விரும்பினான். ஆனால் அவன் குள்ளமாக இருந்தபடியால் கூட்டத்தின் நடுவே நின்று கொண்டு இயேசுவை பார்க்க முடியவில்லை. அவனை எல்லோரும் வெறுத்ததால் முன்னே செல்ல வழியும் விடவில்லை. அவன் வரிவசூலித்து பணத்தை அரசிற்கு கட்டும் பணியை செய்து வந்தான். அதிகமாக வரி வசூலித்து தனக்கும் ஒரு பகுதியை வைத்துக் கொள்ளுவது அவன் வழக்கம். இதனால் மக்கள் அவனை வெறுத்தார்கள்.

எனவே சக்கேயு பாதையின் ஓரத்தில் இருந்த மரம் ஒன்றில் ஏறிக் கொண்டான் இப்போது அவ்வழியே வரும் இயேசுவைக் காண முடியும். அவனிருந்த மரத்தருகே வந்தவுடன் இயேசு நின்றார். அவனை நிமிர்ந்து பார்த்தார். ''சக்கேயு இறங்கி வா; இன்று உன் வீட்டில் உணவருந்த வர விரும்புகின்றேன்'' என்றார். வியப்படைந்த சக்கேயு கீழேஇறங்கினான். தன்னை வெறுக்கும் மக்களையே பார்த்துப் பழகி இருந்தவன் அவன். மிக மகிழ்ச்சியோடு இயேசுவை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

இயேசுவோடு பேசும் போது தன் பாவங்களை அவன் உணர்ந்தான். மக்களை ஏமாற்றி அநியாயமாக பணத்தைப் பெற்றதற்காக வருந்துவதாக இயேசுவிடம் கூறினான். தன்னால் ஏமாற்றப் பட்டவர்கட்கு அவர்கள் பணத்தை திருப்பிக் கொடுப்பதாக வாக்களித்தான். இயேசுவை விசுவாசித்ததால் அன்றே மீட்பைப் பெற்றான் அவன். இயேசு தனது பாவங்கள் அனைத்தையும் மன்னித்ததற்காக மகிழ்ச்சியடைந்தான்.

நன்றி:- மேலான நண்பன் இயேசு

<><><><>

## சாயி கீதம்

இராகம் – சாமா தாளம் – ஆதி

ப – சாயிராம் என்றே சாற்றிடும்
போதினில்
சாந்தி நிலைக்குமென் நெஞ்சினிலே
(சாயி)

அ. ப – ஆயிரம் ஆயிரம்
அல்லலுற்றவையினும்
சாயி நாமமென் சஞ்சலம்
தீர்க்குமே (சாயி)

1 ச – சாந்தஸ்வரூபனே சத்ய நாராய்ணா
மாந்தர் தம் அன்பினை மதிக்கும்
மகாத்மனே
ஏந்தலே ஏழையேன் ஏது தர
வல்லேன்
நான் தருவதுதான் நாம
சங்கீர்த்தனம்

2 ச – சந்தமோடுன்புகழ் சாற்றிடும்
இன்பமே
தந்தெனக் கருள்வையேல்
தகர்ந்திடும் துன்பமே
முந்தை வினை வந்து மூண்டிடும்
முன்னமே
எந்தையே நின்துணைக்
கேங்குமென் உள்ளமே.

— திருமதி கமலம் குமாரசுவாமி —

1994 — 3

<><><><>

# வீண் விரயம் செய்யாதே

ஒரு கிராமத்தில் வாழ்ந்த ஏழைக் குடியானவன் வழிபடுவதற்கு பள்ளிவாசல் இல்லையே என்று கவலை அடைந்தான். ஒரு நாள் அவன் முகமது நபி அவர்களிடம் சென்று ''கிராம மக்களுக்கு வழிபடுவதற்கு பள்ளிவாசல் ஒன்று கட்டித்தருவதற்கு ஏதாவது வழி செய்து தரவேண்டும்'' என்று வேண்டினான். அதற்கு முகமது நபி அவர்கள் தனவந்தர் ஒருவர் இருக்கிறார். அவர் இதற்கு உதவி செய்யக்கூடும் ஆகவே அவரிடம் சென்று கேட்கும்படி கிராம வாசியை அனுப்பி வைத்தார்.

அக் குடியானவன் முகமது நபி கூறியபடி அந்தத் தனவந்தர் வீட்டிற்குச் சென்றான். அங்கே கிராமவாசி கண்ட காட்சி மிகவும் துக்ககரமாக அமைந்தது. அங்கு ஒரு வேலையாளி கம்பத்தில் கட்டப்பட்டு பத்து அடிகள் தண்டனையாக வழங்கப்பட்டது. இதைக் கண்ணுற்ற குடியானவன் 'இந்தத் தனவந்தரிடம் எப்படி பள்ளிவாசல் கட்ட உதவி கேட்பது' என்று எண்ணியபடி முகமது நபி அவர்களிடம் திரும்பி வந்தான். நடந்தவற்றை அவரிடம் சொன்னான். அதற்கு நபி அவர்கள் திரும்பவும் தனவந்தரிடம் சென்று உதவி கேட்கும்படி கூறினார்.

நபிகள் நாயகத்தின் சொல்லைத் தட்டாமல் அவனும் திரும்பவும் தனவந்தரிடம் சென்றான். இம் முறையும் வேறு ஒரு வேலையாள் கம்பத்தில் கட்டப்பட்டு பத்து அடிகள் தண்டனையாக வழங்கப்பவடுதை அவன் கண்டான். மிகவும் மனவேதனையுடன் நபிகளை அடைந்த குடியானவன் நடந்தவற்றை அவரிடம் கூறினான். இம் முறை நபிகள் ''நீ ஏன் அவரிடம் தண்டனைக்குரிய காரணத்தைக் கேட்கவில்லை? அவரிடம் சென்று காரணம் அறிந்து வா'' என்று கூறி அனுப்பி வைத்தார். எனவே குடியானவன் மீண்டும் தனவந்தரிடம் சென்று தண்டனைக்குரிய காரணத்தைக் கேட்டான்.

தனவந்தர் அதற்கு ''முதலாவது வேலையாள் எண்ணை வாங்கி வரும்போது பத்துத் துளிகள் சிந்திவிட்டன. அதனால் அவனுக்கு பத்து அடிகள் தண்டனையாக கொடுக்கப்பட்டது. இரண்டாவது வேலையாள் பருப்பு வாங்கி வரும்போது பத்து பருப்புகள் சிந்திவிட்டன. அதனால் அவனுக்குதண்டனை வழங்கப்பட்டது'' என்று கூறினார். குடியானவன் நபிகளிடம் சென்று தனவந்தர் கூறியதை சொன்னான். பின் நபிகளிடம் ''இந்த சிறிய குற்றத்திற்கு இப்படி தண்டிப்பதா?'' என்று கேட்டான். அதற்கு நபிகள் ''அப்படிக் கவனமாக விரயம் இல்லாமல் பொருள் சேகரித்ததால் அவர் தானதருமம் செய்வதற்கு முடிகிறது. வீண்விரயம் செய்யாது எல்லோரும் நடந்தால் மற்றவர்களுக்கு உதவி செய்வது இலகுவாகும்'' என்று கூறி தனவந்தரிடம் சென்று பள்ளிவாசல் கட்டும் விஷயத்தைப் பற்றிச் சொல்லும்படி கட்டளையிட்டார்.

இதைச் செவியுற்ற தனவந்தர் மிகவும் சந்தோசத்துடன் கட்டிடச் செலவு அனைத்தையும் தானே கொடுப்பதாக வாக்களித்தார்.

சுவாமியும் பல இடங்களில் வீண்விரயம் செய்யக்கூடாது என்று கூறியுள்ளார்.

அமெரிக்க பெண் ஒருத்தி புட்டப்பர்த்தியிலிருந்து அனந்தபூர் சென்று பெண்கள் பாடசாலை வைபவத்தில் கலந்து விட்டு தனது மூக்குக் கண்ணாடியை அங்கே விட்டு விட்டு திரும்பி விட்டார். அதை எடுத்து வருவதற்கு வாடகைக்கார் ஒன்றை அனுப்பி எடுத்திருந்தார். இதை அறிந்த சுவாமிகள் அந்தப் பெண்ணிடம் ''அந்த மூக்குக் கண்ணாடியை புட்டப்பர்த்திக்கு அங்கிருந்து புறப்படும் பேருந்தில் கொடுத்து விடும்படி தொலைபேசியில் சொல்லி இருந்தால் இங்கு எடுத்திருக்க முடியும். வீணாக வாடகைக் காருக்கு பணம் கொடுத்து விட்டாய். விரயம் விரயம்'' என்று கூறினார்.

தொகுப்பு:- நாகச்சந்திரா

# ஆசிரியுரை

## Sri Sathya Sai Organisations

*Central Co-ordinator — Sri Lanka.*

இலங்கையிலுள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களின் சார்பில் ''சாயி மார்க்க'' என்ற சஞ்சிகை ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் மூன்று மாதங்களிற்கு ஒரு முறை வெளிவந்து கொண்டிருக்கிறது. இவ்வருடம் ஐப்பசி மாதம் தொடக்கம் தமிழிலும் இச்சஞ்சிகை வெளியாக இருப்பது தமிழ் வாசகர்களிற்கு மகிழ்ச்சியான காரியமாகும். வெளியிடும் பொறுப்பை வடபிராந்திய இணைப்புக்குழு ஏற்றிருக்கின்றது. ஆங்கில, சிங்கள சஞ்சிகைகளை வெளியிடும் பொறுப்பு ஏற்கனவே மேற்கு-மத்திய இணைப்புக் குழுவிடம் விடப்பட்டிருக்கின்றது.

''சாயி மார்க்கம்'' என்ற தமிழ் சஞ்சிகையின் பதிப்பாசிரியராக எழுத்தாளரும், வடமராட்சி வியாபாரிமூலை சத்ய சாயி நிலையத்தின் தலைவரும், வைத்திய கலாநிதியுமான டாக்டர் எம். கே. முருகானந்தன் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### இந்தச் சஞ்சிகையின் நோக்கம்

1) பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் போதனைகளைப் பரப்புவது.
2) பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் போதனைகளை, மக்களிற்கு விளக்கம் தரக்கூடிய முறையில் எழுதப்பட்ட கட்டுரைகள், கதைகள், கவிதைகள், சிறு நாடகங்கள் முதலியன வெளியீடு செய்தல்.
3) இலங்கையில் ஆன்மீகம், மனித விழுமியக் கல்வி, மக்கள் சேவை என்ற மூன்று அம்சங்களிலும் சத்ய சாயி நிறுவனங்கள் செய்து கொண்டிருக்கும் வேலைத் திட்டங்களை விமரிசனம் செய்தல்.
4) பிரசாந்தி நிலையத்திலும், இலங்கையிலும் சத்ய சாயி நிறுவனங்களால் நடாத்தப்படவிருக்கும் முக்கிய நிகழ்சிகளிற்கு முன்னறிவித்தல் கொடுத்தல்.

எதைச் செய்தாலும், எங்களில் உறைந்து கிடக்கும் தெய்வீகத் தன்மையை மிளிரச் செய்வதே எங்கள் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டுமென்ற பகவான் பாபாவின் அறிவுறுத்தலை மனதில் அமர்த்தி பகவானின் நற்கருவிகளாக நாங்கள் விளங்குவதற்கு ''சாயி மார்க்கம்'' உழைக்க வேண்டும். இதற்கு பகவானின் கருணையை வேண்டுவோமாக.

27-08-94. - செ. சிவஞானம்

## புதிய நூல்கள்

★ அன்பார்ந்த சாயி அடியார்களுக்கு
ஆசிரியர்: நந்தி பக்கங்கள்: 50 விலை:
வெளியீடு: பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம் - யாழ்ப்பாணம்.

★ நாமஸ்மரணை (ஆங்கிலத் தொகுப்பு: கலாநிதி பிரம்மானந் மவின் குர்வே)
தமிழாக்கம்; ஞா. குகஞானி பக்கங்கள்: 34 விலை:
வெளியீடு: பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம் - யாழ்ப்பாணம்.

# ஆசியுரை

**Co-ordinating Committee**

*Sri Sathya Sai Organisation*

*Northern Zone - Sri Lanka.*

**சா**யி மார்க்கம் இப்பொழுது தமிழிலும் வெளிவருவது சாயி அன்பர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

சுவாமியின் வாழ்வும், பணியும், செய்திகளும் முக்கிய இடத்தைப் பெறும் அதே வேளையில், சாயி அன்பர்களின் அனுபவங்களுக்கும், சாயி நிறுவனச் செய்திகளுக்கும் போதிய இடமளிப்பதன் மூலம் சாயி குடும்பத்தினரிடையே அன்பையும், புரிந்துணர்வையும், நெருக்கத்தையும் வளர்க்கவும் இச்சஞ்சிகை நிச்சயம் உதவும்.

இச்சஞ்சிகை சிறப்புற வெளிவர அதன் ஆசிரியர் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தனுக்கும், ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திருவாளர்கள் *R*. வசந்தசேனன், *S. R*. சரவணபவன், கி. சிவனேசன் ஆகியோருக்கும் பகவானின் ஆசியும் வழிகாட்டலும் பூரணமாகக் கிடைக்க பகவானின் தாமரைப் பொற்பாதங்களைத் தொழுது நிற்கிறோம்.

பகவானின் ஆசியுடன் வெளிவரும் இச்சஞ்சிகையை எல்லாச் சாயிசகோதரர்களும் வாசித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

விடயதானங்களை ஆசிரியருக்கு அனுப்பவும்.

ஜெய் சாயி ராம்.

82, நல்லூர்
குறுக்கு வீதி
யாழ்ப்பாணம்
23 - 8 - 94.

S. விஜயரட்ணம்
தலைவர்
வடபிராந்திய
இணைப்புக் குழு.

★ பக்தர்களுக்கு சுவாமியின் வழிகாட்டல்கள்
பக்கங்கள்: 48 விலை: 35/-
வெளியீடு: பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா பஜனை நிலையம்
வியாபாரிமூலை. (பருத்தித்துறை)

★ தர்மவாஹினி
ஆக்கம்: பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா
பக்கங்கள்: 92 விலை: 55/-
இலங்கையில் மறுபிரசுரம்: பகவான் ஸ்ரீ சத்ய சாயி பஜனை நிலையம்-கொக்குவில்.

★ பரமாத்மா பாபா
தொகுப்பும், தமிழும்: ஞா. குகஞானி
பக்கங்கள்: 15 விலை: 14/-
வெளியீடு: சாயி இல்லம் - தாவடி.

புதிய புத்தகங்கள் பற்றிய விபரங்களை வெளியிடுவோர், அறியத் தரவும்.

# இயற்கையின் அற்புதங்களுக்கெல்லாம் அற்புதம் பெண்களே!

*— பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா —*

பெண்களைக் கடவுளின் சக்தி என்பார்கள். அதுவே மாயையுங் கூட. இந்த இரண்டின் (சக்தி, மாயை) உருவமே பெண். அதனாலேயே பெண்ணை பராசக்தியின் வடிவம் என்று சொல்லுகிறார்கள். பெண், மனிதனின் நம்பிக்கைக் குரிய தோழி: வாழ்க்கையின் அருஞ்செல்வம்: இறைவனின் சங்கல்பத்தின் பருப்பொருள்: இயற்கையின் விசித்திரம். இயற்கையின் அற்புதங்களுக் கெல்லாம் அற்புதம். பெண் வீட்டுக்கு அரசி, சக்தியின் பிரதிநிதி: வீட்டுக்கு லக்ஷ்மி போன்றவள் பெண்ணே. மனிதனுக்கு இனிமையான துணைவி. சக்தி ஸ்வரூபிகளான பெண்கள், ஆண்களைக் காட்டிலும் எந்த விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்லர். இயற்கையாகவே அவர்கள் பொறுமை, சகிப்புத்தன்மை, பக்தி, பிரேமை ஆகியவை நிரம்பியவர்கள்.

நற்குணங்கள் அனைத்துக்கும் இருப்பிடமானவர்கள் பெண்கள். அவர்களுக்கு உள்ள அளவு மனக்கட்டுப்பாடு ஆண்களுக்கு இருப்பதில்லை. அத்யாத்மிகப் பாதையில் முன் மாதிரியாகத் திகழ்பவர்கள் பெண்களே. தன்னலமற்ற, பரிசுத்தமான பிரேமை பெண்களின் பிறப்புரிமை. அறிவும், அன்பும், அறநோக்கும், பண்பும் நிறைந்த பெண்கள் வீட்டுக்குத் திருவைப் (லக்ஷ்மி) போன்றவர்கள். கணவனுடன் அன்பால் பிணைக்கப்பட்ட மனைவி, அருமையான மணம் பரப்பும் மலர். நற்குணங்கள் நிரம்பிய மனைவி கணவனுக்குச் சூடாமணி: ஒளி வீசும் ரத்தினம்.

பெண்களுக்குப் பதிவிரதா தர்மமே லட்சியம். அந்த நற்பண்பின் சக்தியைக் கொண்டு அவர்கள் எதையும் சாதிக்கும் வலிமை பெறுகிறார்கள். அந்த மகத்தான சக்தியைக் கொண்டுதான் சாவித்திரி இறந்த கணவனின் உயிரை மீட்டாள்.

கற்பே பெண்ணுக்குச் சிறந்த தலையணி (கிரீடம்) போன்றது. கற்புடைய பெண்ணை உலகமே போற்றிப் புகழும். இந்தப் பண்புடைய பெண்ணின் சக்தியை விரித்துரைப்பது இயலாத காரியம். எவ்வளவு பெரிய துன்பம் நேர்ந்தாலும், இந்தக்கற்பின் சக்தியே அவளைக் காத்து இரட்சிக்கும். கற்பே பெண்ணின் உயிர் மூச்சு. கற்பின் மகிமையால் பெண் தன்னைத் தானே காத்துக்கொள்வது மட்டுமின்று, வானுலகையும் (சுவர்க்கத்தையும்) அடைவாள் இதில் சந்தேகமே இல்லை. தன்னைக் கெட்ட நினைவோடு நெருங்க வந்த வேடனை ஒரேயொரு சொல்லின் மூலம் சாம்பலாக்கினாள் தமயந்தி.

எந்த வீட்டில் கணவனும் மனைவியும் உயர்ந்த நோக்கங்களின் நிழலில் வாழ்கிறார்களோ, எந்த இல்லத்தில் ஹரி நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு நற்செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்களோ, சத்தியத்தைக் கடைப்பிடித்து, அன்பும் அருளும் கொண்டு, சாந்தி நிறைந்தவர்களாய், தர்மநூல்களைப் படித்து, புலன்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு, சகல உயிரினங்களிடத்தும், சம நோக்கோடு அன்பு செலுத்துகிறார்களோ அந்த வீட்டில் லக்ஷ்மி வாசம் செய்வாள். அந்த இல்லம் அமரர் வாழும் உலகமாக இருக்கும்.

பெண்ணுக்கு நாணம் அணிகலன் போன்றது. அதன் எல்லையைத் தாண்டுவது பெண் தர்மத்துக்கே மாறான செயல். தர்ம விரோதமான செயல் மட்டுமல்ல. அதனால் பெண் அநேக அபாயங்களுக்கு உள்ளாக நேரிடும்.

*— தர்மவாஹினி —*

# நூல் அறிமுகம்

## I) சாயி பாபா அவதாரங்கள்

ஆசிரியர்: வானதி ரவீந்திரன்.

வெளியீடு: றன்கோ பதிப்பகமும்,
வெளியீட்டாளரும்,
கொழும்பு.

''கடவுளை எங்கே காணமுடியுமென மிக்க ஆர்வத்துடன் எவர் உன்னைக் கேட்டாலும் அக்கேள்வியைத் தவிர்க்க முயலாதே. உனது உள்ளத்திலிருந்து எழும் பதிலை நீ கொடு. அவரைப் புட்டபர்த்திக்கு ஆற்றுப் படுத்தி எனது மகிழ்ச்சியில் பங்குகொள்ள அழைப்பாயாக.''

— பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா —

துன்பத்தால், துரதிர்ஷ்டத்தால், நோயால் ஒருவன் அலைக்கழிக்கப்படும் போது தனக்கு நேர்ந்த இந்த இக்கட்டுக் களையெல்லாம் தாண்டி அமைதியை அடைவதற்கு உதவ இறைவன் இருக்கிறார் என்ற திட நம்பிக்கையுடன் அவரது இரு பாதங்களையும் சிக்கெனப் பிடித்தாலன்றி மானிடர்க்கு வேறு வழி ஒன்றில்லை. காலை நேரத்துப் பனிபோல் நிலையில்லாததாகிய அவர் செய்யும் அற்புதங்களை மட்டும் பிடித்துக் கொள்ளாது தனக்கு ஏற்பட்ட சுமையைத் தாங்க துன்பத்தைத் தாங்கிக் கொள்ளத் தன்னுள் அவரால் ஏற்படுத்தக்கூடிய அற்புதத்தையே அவரிடம் வேண்டுதல் வேண்டும். எல்லாம் அவன் செயல் அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற நம்பிக்கை கொண்டு நடப்பனவற்றால் வெறுப்படையாது, துன்பத்தை மனமுடையாது தாங்கி அத் துன்பங்களை அகற்ற மன உறுதி கொண்டு அவன் பாதத்தில் சரணடைந்து யாவற்றையும் கடந்த ஓர் நிலையை அவனருளால் அடைந்து நிற்க வேண்டும்.

''ஓம் தற்புருஷாய வித்மகே மகாதேவாய
தீமகி தன்னோ ருத்ர பிரசோதயாத்''
என உபநிடதம் கூறுகிறது.

''அவனன்றி ஓரணுவும் அசைவதில்லை. அந்த அவனே உண்மையானவன். (நித்தியமானவன்) உலகின் கண்ணுள்ள எல்லா அசைவுள்ள அசைவற்ற பொருள்களை காத்து ரட்சிக்க அந்த ஒருவனை பிரார்த்திப் போமாக''

இவை அந்நூலிலிருந்து எடுக்கப்பட்ட சில நறுக்குகள். அந் நூலின் சிறப்பை விளக்க இன்னும் கூறவேண்டியது அவசியம் தானா.

## II) சுவாமியுடன் ஒரு சம்பாஷனை

வெளியீடு: பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா
நிலையம் – சாவகச்சேரி

விலை: ரூபா 40/–

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா 1976 ம் ஆண்டில் 'பிளிட்ஸ்' என்ற பிரபல இந்திய சஞ்சிகையின் ஆசிரியருக்கு வழங்கிய நீண்ட பேட்டியின் தமிழாக்கமே இந்நூலாகும். சுவாமியுடைய அவதாரம், அவரின் அற்புத ஆற்றல்கள், போதனைகள் ஆகியவற்றில் நம்பிக்கையற்றவராயிருந்த அதன் ஆசிரியர் திரு. R. K கரன்ஜியா அவர்கள் கேட்ட பல்வேறுபட்ட கேள்விகளும் பகவான் அளித்த பதில்களும் பகவானை நம்பாதவர் களைக்கூட நம்பவைக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தவை. 'அற்புதங்களை' நிகழ்த்தும் சில போலிகளைப் பற்றியும் பகவான் விளக்கமளிக்கிறார்.

ஒவ்வொரு சாயி அடியாரும் தான் படிப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாது பகவானைச் சந்தேக கண்கொண்டு பார்ப்பவர்களுக்கும் அறிமுகப்படுத்த வேண்டிய முக்கிய நூல் இது.

மாணவர் பகுதி

# நாக்கு நமக்குக் கற்பிக்கும் பாடம்

தன்னடக்கத்துடனும், கவனத்துடனும் நாக்கு பற்களுக்கு இடையே இருந்து வருகிறது. பற்கள் கத்திகளைப் போன்று சுற்றிலும் உள்ளன. அவைகளின் மத்தியில் இருந்து கொண்டு நாக்கு எவ்வாறு செயல்ப்படுகிறது என்பதைப் பார்த்தால், அது எவ்வளவு தன்னடக்கத்துடன் செயல்படுகிறது என்று தெரியும். சற்றுக் கவனக் குறைவாக இருந்து ஒரு பல்லுக்கு இடையில் மாட்டிக் கொண்டால், உடனடியாகக் கஷ்டம் வரும். அதுபோல நாமும் நம்மைச் சூழ்ந்து எதிரிகள் இருந்த போதும், அவர்களிடம் இருந்து நமக்கு எந்தத் தீங்கும் வராத வகையில் நமது வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டும்.

நாக்கின் தியாகபுத்தி:- எப்பேர்ப்பட்ட சுவை மிக்க பொருளை அதன் மேல் வைத்தாலும் சுவை மட்டும் அறிந்து தனது அடுத்த உறுப்பான வயிற்றுக்கு சீரணத்திற்காக அனுப்பி விடும். மாறாகக் கெட்ட உணவு ஏதாவது அதற்குக் கொடுத்து விட்டால் சுவையினைக் கண்டு துப்பி விடுகிறது.

— பாபா —

(பிருந்தாவனத்தில் கோடை அருள்மழை 1973)

நல்ல நாக்கு

நிலாவெளி என்று பெயருக்கு ஏற்ப இயற்கை எழில் கொஞ்சும் ஒரு கிராமம். அந்தக் கிராமத்திலே சீரிய பண்பும், கூரிய விவேகமும் உடைய கேசவன் என்று ஒரு சிறுவன் வாழ்ந்து வந்தான். கொழும்பிலே உத்தியோகம் பார்க்கும் மாதவன் மாமா தனது விடுமுறையைக் கழிப்பதற்காக கேசவன் வீட்டிற்கு வந்திருந்தார். கதைப் பிரியனான கேசவனுக்கு, மாமா மாலை வேளைகளில் சுவை ததும்பும் கதைகள் கூறுவார். அன்று மாலை கடற்கரைக்குப் போய் விளையாடிவிட்டு வெண்மணற் பரப்பில் அமர்ந்தனர். மாமா கதை கூற ஆரம்பித்தார்.

'முன் ஒரு காலத்திலே ஒரு நாட்டு அரசன் தன் நாட்டு மக்கள் எல்லோரும் அறிவு படைத்தவர்களாகவும், ஆனந்தம் நிறைந்தவர்களாகவும் விளங்கச் செய்யக் கூடியது எது என்று அறிந்து கொள்ள விரும்பினான். அவன் ஆட்சியில் உள்ள அறிவாளிகள் அத்தனைபேரையும் அழைத்து நிறைவான, நிலையான மகிழ்ச்சியைத் தனது குடிமக்கள் அனைவருக்கும் அளிக்கக் கூடியதான பொருட்களைக் கொண்டு வந்து ஒரு கண்காட்சி அமைக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டான்.

அவர்களும் அரசன் சொற்படி ஒரு கண்காட்சியினை ஒழுங்கு செய்துவிட்டு அதனைச் சம்பிரதாயப்படி ஆரம்பித்து வைக்க அரசனை அழைத்தனர். அதனை ஆரம்பித்துவைத்து, அரசனும் கண்காட்சியினைப் பார்வையிடலானான். வாசனை வீசும் மலர்ச்செடிகள், சுவையான கனி வகைகள், பல் வேறு இனிப்புப் பொருட்கள் அருமையான நூல்கள் வண்ணப் பட்டாடைகள் விலை மதிப்புடைய தங்க ஆபரணங்கள், இன்னிசை எழுப்பும் வாத்தியக் கருவிகள் எனப் பலதரப்பட்ட பொருட்கள்

அங்கே வரிசை வரிசையாக நல்ல நல்ல பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஆனால் இவற்றில் ஒன்றுமே மக்கள் எல்லோரையும் மகிழ்வூட்டும் என அரசனுக்குத் தோன்றவில்லை.

இறுதியாக அவன் களி மண்ணால் செய்து வர்ணந் தீட்டப் பெற்ற ஒரு பொம்மை அருகே வந்தான். தெரு ஓரத்தில் இருக்கும் ஒரு வயதான பசியினால் மெலிந்த, ஏழையோடு முக மலர்வுடன் நாக்கை நீட்டியவாறு பேசிக் கொண்டிருக்கும் முக அமைப்பினைக் கண்டான். அதன் அடியில் 'நல்ல நாக்கு' என பெரிய எழுத்தினால் இரண்டு சொற்கள் எழுதப்பட்டிருந்தன.

அரசன் அது குறித்து மேலும் அறிந்து கொள்ள விரும்பி அந்தச் சிற்பத்தை உருவாக்கிய சிற்பியை உடனே வரவழைத்து அது பற்றி வினவினான். சிற்பி ''பிரபோ! இக் கண்காட்சியில் உள்ள மற்றைய பொருட்கள் மனிதனுக்குச் சில நாட்களே, சில கணங்களே இன்பம் தரவல்லன. ஆனால் ஒரு நல்ல நாக்கு இருக்கிறதே, அது பரிவுடனும் அன்புடனும் ஒரு சில சொற்கள் பேசுவதால் ஆண்டாண்டு காலம் மற்றவர்களை மகிழ்வுறுத்தி விடும். துன்பத்தில் உழல்பவர்களுக்கு அது நம்பிக்கையும் உற்சாகமும் தரவல்லது, நலிவுற்றவர்களுக்கு வலிமையும் தெம்பும் ஊட்டவல்லது. திக்கற்றவாகளுக்கும் பரிவையும் அன்பையும் பொழிய வல்லது. எல்லாம் இழந்தவர்களுக்கு வாழ்வும் ஊக்கமும் கொடுக்கக் கூடியது. எனவே ஒரு நல்ல நாக்கு மட்டுமே எல்லோருக்கும் எப்போதும் மகிழ்வை அளிக்கக் கூடியதாகும்'' என்று கூறினான்,

அதனைக் கேட்டு அளவு கடந்த மன நிறைவும் மகிழ்ச்சியும் அடைந்த அரசன் ஒரு பொன்னால் ஆன பெட்டியில் தங்க நாணயங்களை நிரப்பி அந்தச் சிற்பிக்கு வெகுமதியாக அளித்தான்' என மாதவன் மாமா கதை கூறி முடித்தார்.

அடுத்த இதழில் மாதவன் மாமா சுவைததும்ப தீயநாக்கு பற்றிய கதையைக் கூறுவார். நீங்களும் மகிழ்வுடன் கதையை வாசிக்க ஆவலுடன் காத்திருங்கள்,

ஜெய் சாயி ராம்.

## வினா விடை

1. பகவான் சத்திய சாயி பாபாவின் அழகிய கிராமமான புட்டபர்த்தி இந்தியாவில் எந்த மாவட்டத்தைச் சார்ந்தது?
2. பகவான் எந்த வம்சத்தைச் சார்ந்தவர்?
3. கலியுக தெய்வமாக அவர் ஏன் திரு அவதாரம் செய்துள்ளார்?
4. சிறியதோர் பென்சில் துண்டைக் காணவில்லையே எனப் பல மணி நேரம் களைக்கக் களைக்கத் தேடிக் கண்டு பிடித்து அதனையே உபயோகித்த பெரியார் யார்? அச் செயலின் மூலம் நீர் கற்றுக் கொண்ட பாடம் என்ன?
5. படைத்தல் தொழிலைச் செய்பவர் யார்?

இந்த வினாக்களுக்கான விடைகளை அழகாக எழுதி டிசம்பர் 30 க்கு முன் கிடைக்கத் தக்கதாக சாயி மார்க்க ஆசிரியர் விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா நிலையம், பஜனை நிலையம் ஆகியவற்றில் அங்கத்தவர்களாக இருப்பவர்களின் பிள்ளைகளே இப் போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பெயர் விலாசத்துடன் உங்கள் பெற்றோர் அங்கத்தவராயிருக்கும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா நிலையம் அல்லது பஜனை நிலையத்தின் பெயரையும் குறிப்பிடுங்கள்.

சரியான பதில்கள் பகவானின் பாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, முதல் எடுக்கப்படும் மூன்று பேரின் பெயர், விலாசங்கள் அடுத்த சாயி மார்க்கம் இதழில் பிரசுரமாகும்.

# உங்களது வாழ்க்கைதான் எனது செய்தி

எனது வாழ்க்கையே நான் தரும் செய்தி என்று சுவாமி இவ்வளவு காலமும் கூறிவந்தார். அவருடைய செய்தியைப் பூரணமாக விளங்கிக் கொள்ள நாம் முயற்சி எடுத்திருக்கிறோமோ? அவர் எங்களுக்கு உதாரண புருஷராக வாழ்ந்து வருகிறார். இப்படிப்பட்ட ஒரு செய்தியை வேறெங்காவது இதுவரை கேள்விப்பட்டிருக்கிறோமா? அல்லது வாசித்திருக்கிறோமா?

இப்போது 1993 ம் ஆண்டு அவதார தினக் கொண்டாட்டத்தின் போது ''உங்கள் வாழ்க்கையே நான் தரும் செய்தி'' என்று கூறியுள்ளார். எங்களிடமிருந்து எப்பேர்ப்பட்ட எதிர்பார்ப்பு? அந்த எதிர்பார்ப்புக்கேற்ப எம்மால் வாழ முடியாவிடில் நன்றி கெட்ட பக்தர்கள் என்று எம்மைக் கணிக்க மாட்டாரா?

எனவே இந்தச் செய்தியைநாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அவருடைய வாழ்க்கையை விளங்கிக் கொள்ள வேண்டும். அவருடைய செய்தி என்ன என்பதை அவருடைய சில கருத்துக்கள் ஊடாகப் பார்க்கலாம்.

## ஏன் தெய்வம் அவதரிக்கிறது?

தீயவர்களைத் தண்டிக்கவும் நல்லவர்களைக் காக்கவுமே தெய்வம் அவதரிக்கிறது என்று புராணங்களும் பண்டைய முனிவர்களும் கூறுகின்றனர். இது சரியல்ல; அன்பை மனித குலத்தில் விதைக்கவும், அதை நடைமுறைப்படுத்தவும், அன்பை மனித குலத்திற்கு வலியுறுத்தவும், அதை மனித குலத்திடையே பரப்பவுமே தெய்வம் அவதரிக்கிறது. இப்படி அன்பு வளரும் போதுதான் மனிதன் கஷ்டங்களிலிருந்தும் கவலைகளிலிருந்தும் விடுதலையடைய முடியும். பாவங்களைத் துடைக்க முடியும். மனிதனை பயம் தீண்டாதபடி தடுக்க முடியும்.

ச, சா. (ஆங்) 1988 ஆகஸ்ட் பக்கம் 198.

## அவதாரத்தின் பங்கு

தனிப்பட்டவர்களின் கஷ்டங்களினையும், துன்பங்களினையும் விடுவிப்பதற்காகக் கடவுள் அவதரிப்பதில்லை. கஷ்டங்களும், துன்பங்களும் கடந்தகாலச் செயல்களின் விளைவாக இயற்கையாக வருபவை. அவதாரமாகத் தெய்வீகம் வருவது மனித குலத்திற்கு அன்பைப் பற்றிய உண்மையைக் கற்பிப்பதற்கே! அன்பும் தியாகமும் தான் மனிதனைத் தெய்வமாக்கும்.

ச. சா. (ஆங்) அக்டோபர் பக்கம் 253

## அவதார நோக்கு

இராமர், கிருஷ்ணர், மத்சயர், வரதர் அல்லது வாமனர் அல்லது எந்த அவதாரமானாலும் சரி அது ஒரேயொரு காரணத்துக்காகத்தான் அவதரிக்கின்றது. நீங்கள் அவதாரத்தின் அந்நேர விளைவுகளைத் தான் இனங்காண்பீர்கள். மனித குலத்திற்கு அன்பின் உண்மைத்தன்மையைப் போதிப்பதற்காகத்தான் அவதாரம் தோன்றுகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஏ மனிதனே! சுயநலம் நிரம்பியதால் தான் குழப்பமும் ஒழுங்கீனமும் உலகில் நிரம்பியுள்ளது. அன்பையும் தியாக மனப்பாங்கையும் நீங்கள் விருத்தி செய்தால்தான் மனிதனிடமுள்ள தெய்வீகத்தை உங்களால் உணர முடியும். தியாக மனப்பான்மை இல்லாத மனிதன் எல்லாவித துன்பங்களுக்கும் இரையாவான். அன்பு இல்லாத மனிதன் ஒரு நடைப்பிணம். அன்பும் தியாகமும் தான் மனிதனைத் தெய்வமாக்குகின்றன.

ச. சா. (ஆங்) 1988 ஒக். பக்கம் 255

## அன்பின் பாதை

அன்புதான் அன்பின் பழம். அன்பே தனது சொந்தச் சாட்சி. அதில் சுயநலம் என்ற பக்கமே இருக்க முடியாது. அன்பு

அன்பிற்காகத்தான் நிலைத்துள்ளது. அதற்குப் பயம் இல்லை, அன்பின் பாதையை மனிதனுக்கு கற்பிப்பதற்காகவே அவதாரங்கள் உலகில் தோன்றுகின்றன. ஒன்றிலிருந்து பல தோன்றியதை உலகம் காட்சிப்படுத்துகிறது. பல்வேறு காட்சிகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைத் தெய்வீகம் எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதைத் தெய்வத்தின் மூலமே உணர முடியும்.

ச. சா. (ஆங்) 1988 அக். பக்கம் 256

## அதி உன்னத பணி

பிரபஞ்சத்தின் அடிப்படையான இறை தத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக ஒவ்வொருவருள்ளும் உள்ளுறையும் நிலையான ஆத்மாவை உணர்ந்து மிளிரச் செய்து, மனிதன் தன்னில் ஒளிந்திருக்கும் மிருகக் குணத்திலிருந்து விடுபட்டு, எல்லோரையும் இணைக்கின்ற தெய்வத்தை உணரச்செய்து, சகோதரத்துவத்தின் மூலம் மனிதகுலம் முழுவதையும் ஒரு குடும்பமாக ஒன்றிணைத்து தெய்வீக நிலைக்கு இட்டுச் செல்லும் அதி உன்னத பணிக்காகவே சாயி அவதரித்துள்ளார்.

நான் அன்பே உருவானவன். அன்புதான் எனது ஆயுதம். எனது அன்பைப் புரிந்து உணர்ந்தவர்கள் எனது உண்மைத் தன்மையை சற்றேனும் அறிந்தவர்களென உரிமை கோரலாம். மனித குலத்தை என்னிடம் இட்டுச் செல்லும் ராஜ பாதை அன்புதான்.

ச. சா. (ஆங்) 1988 டிசம். பக். 335

## அன்பை அபிவிருத்தி செய்யுங்கள்

பிளவுபட்ட நோக்கு இன்று மனிதனைப் பீடித்துள்ளது. இருமை நோக்கு துன்பத்தைத் துடைக்காது; அதிகரிக்கவே செய்யும். பேரானந்தத்திலிருந்து வெகு தொலைவிற்கு தள்ளி வைத்து விடும். ஆகவே ஒருமைத் தன்மையை (ஏகத்துவம்) வளர்த்துக் கொள்வது மிக அவசியம். அன்புதான் இந்த ஒருமைத் தன்மையை வளர்க்கும். இந்த அன்பிற்கு அன்பைத் தவிர்ந்த வேறெந்தப் பாதையும் தேவையில்லை. அன்பையே தவிர சன்மானமும் இல்லை, கட்டுப்பாடும் இல்லை. எவ்வளவு அன்பை அபிவிருத்தி செய்கிறோமோ அந்த அளவிற்கு பேரானந்தத்தை அனுபவிக்கலாம்.

ச. சா. (ஆங்) 1988 ஆகஸ். பக். 198

ஆம், அவருடைய செய்தி அன்பு. அன்பு அன்பு மாத்திரம்தான். பஜனை, ஜெபம், தியானம், சேவை, தியாகம் அல்லது எதுவானாலும் அன்பு இல்லாமல் நிறைவேறாது. பஜனை, ஜெபம், தியானம், சேவை தியாகம் ஆகிய இது போன்ற ஆத்மீக சாதனைகளில் அன்பு இல்லாமல் ஒன்றுமில்லை. அன்பு இல்லாவிடில் எம்மை எங்கும் இட்டுச் செல்லாது. நாம் முற்றாகத் தீர்க்க வேண்டிய தற்பெருமையை கூட்டுவதாக இருக்கும். அன்பை வளர்க்கும் ஆன்மீகப் பயிற்சியானது கடவுளிலும் உயிர் வாழ்வனவிலும் சமமாக ஒரே நேரத்தில் வளர வேண்டும்.

ஆகவே, பகவானில் எமக்கிருக்கும் பக்தியைக் காட்டுவதற்காக ஒரு பிரதிக்ஞை எடுத்துக் கொள்வோமாக. பஜனை, ஜெபம், தியானம், சேவை முதலியவற்றில் ஈடுபட்டிருக்கும் போது குறுகிய பிரிவினைவாத உணர்வுகளும், சுயநல உணர்வும் தோன்றினால் அதை குறுகிய நேரத்திற்கு விட்டு விடுவோம். கடவுள் எங்கும் நிறைந்தவர் என்ற உணர்வு வரும் வரை சாதனையிலுள்ள சந்தேகங்களை பகவானிடம் கேட்க எமக்குச் சுதந்திரமுண்டு.

''நீங்கள் ஒவ்வொருவரும் உலகம் முழுவதும் எனது அன்பைப் பொழியும் அலை வரிசையாக வேண்டும்''

லூக்கஸ்றலே என்பவர் சொல்லிய சாயி செய்தியுடன் இதை முடிக்கிறேன்.

''செயல் வேண்டும்.
செயல் உலகைத் தூய்மைப்படுத்தும்
அன்புதான் தூய்மையாக்கும் மருந்து
ஆகவே வெளியே சென்று உலகை அன்பினால் நிரப்புங்கள்.
நான் உங்களுக்கு உதவி செய்வேன்.
நான் உங்களுக்கு வழிகாட்டுவேன்.''

— பாபா —

ஸ்ரீ எம். கே. சிவபாதவிருதயர்.

# ஆன்மீக சாதனை — 1994

கடந்த ஆண்டு நடைபெற்ற 45 நாள் ஆன்மீக சாதனை பற்றிய புனித நினைவுகள் சாயி அன்பர்கள் மனத்தில் இன்னும் பசுமையாகவே இருக்கும். அச்சாதனையில் இலங்கை பூராவும் பங்கு பற்றியவர்களின் பெயர் விபரங்கள் புத்தகமாகக் கட்டப்பட்டு இலங்கையின் மத்திய இணைப்பாளர் உயர்திரு செ. சிவஞானம் அவர்களால் பகவானின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டது. குருபூர்ணிமாவிற்கு அடுத்த தினமாகிய 23-07-94 அன்று வைட்பீல்ட் பிருந்தாவனத்தில் பகவான் அதனைத் தன் திருக்கரங்களால் ஆசீர்வதித்தார்.

அச்சாதனையில் வட பிராந்தியத்திலிருந்து மாத்திரம் 1943 பேர் பங்கு பற்றினர். ஏனைய இரு பிராந்தியங்களிலிருந்து மேலும் பலர் பங்கு பற்றினர். பகவானின் ஆசீர்வாதம் கிடைத்ததைத் தொடர்ந்து நாட்டில் மன அமைதி தரும் செய்திகளைக் கேட்டு வருகிறோம். இச் சூழ்நிலையை மேலும் ஸ்திரமாக்குவதற்கு இவ்வருடமும் 45 நாள் சாதனை நடைபெறுகிறது.

1994 அக்டோபர் 9ம் திகதி ஆரம்பமாகி நவம்பர் 22ம் திகதி நிறைவுறவுள்ள இவ்வருடச் சாதனை நேரத்தில் சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சத்வகுண நேரத்தில் சாதனையைச் செய்வது சிறப்பாக இருக்கும் என்ற காரணத்தால் மாலை 7·30 முதல் 8 மணி வரை இச்சாதனை நடைபெறும்.

மாலை 7·30 மணிக்கு – மூன்று தடவை ஓங்காரத்துடன் சாதனை ஆரம்பம்.

மாலை 7·30 - 7.50 வரை – பிரார்த்தனை
7·50 – 8·00 வரை – இலங்கை பூராவும் ஒரே நேரத்தில் எல்லோரும் தியானம்.

முடிவில் – லோகா சமஸ்தா சுகினோ பவந்து (3 தடவை)
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி சொல்லி முடித்தல்.

நாமலிகிதம் எழுதுபவர்கள், இப் பிரார்த்தனையில் ஈடுபட நேரம் போதாது எனக் கருதினால் பிரார்த்தனை நேரத்தில் அதை எழுதலாம். ஆயினும் கூடிய நேரம் சாதனையில் ஈடுபடுவதே சிறப்பு.

பகவானின் அவதார தினத்தில் நாமலிகிதம், 45 நாள் பிரார்த்தனை ஆகிய சாதனைகளைப் பூர்த்தி செய்வதுடன் எம்மிடமுள்ள ஏதாவது ஒரு தீய குணத்தைக் கைவிடுவதாக அல்லது ஒரு நல்ல குணத்தைக் கைக்கொள்ள ஆரம்பிப்பதாக சங்கற்பம் செய்வோமாக.

ஆன்மீக இணைப்பாளர்
வட பிராந்தியம்

*கோடிக்கணக்கான நூல்களிலிருந்து ஒருங்கு சேர்த்த புலமையிலும், ஒருநேரத் தியானத்தினின்றும் பெறப்பட்ட மணியளவு ஞானமே மிகமிகப் பெறுமதி வாய்ந்தது.*

— பாபா —

# சாயி நிறுவனச் செய்திகள் — வடபிராந்தியம்

## சமூக சுகாதார சேவைப்பணி

வடபிராந்திய சத்ய சாயி நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய சேவைப்பணி இது.

இடம் பெயர்ந்தும், விவசாயம் மீன்பிடி ஆகிய தொழில்களில் ஈடுபட்டும் வறுமை நிலையில், போதிய மருத்துவ வசதியின்றித் துன்புறும் கெற்பேலி, பாலாவி, விடத்தற்பளை, கச்சாய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆறாயிரத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் இச்சேவைப்பணி திட்டமிட்டு நடாத்தப்பட்டது.

இக்கிராமங்களில் வாழும் 35 வயதுக்கு மேற்பட்ட மக்களிடையே மறைந்திருக்கும் நீரிழிவு, உயர்இரத்த அமுக்கம், பார்வைக் குறைபாடு ஆகிய நோய்களை இனங்கண்டு அவர்களுக்கு வைத்திய நிபுணர்களின் சேவைகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நோய்களை இனங்காணும் ஆரம்பப் பரிசோதனைகள் சாயி நிறுவனத்தைச் சேர்ந்த இரு வைத்திய அதிகாரிகளால் நடாத்தப்பட்டது.

27-03-94 விடத்தற்பளை கமலாசினி வித்தியாசாலையிலும்,
03-04-94 கெற்பேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும்,
23-04-94 கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும்,

நடைபெற்ற மேற்படி நோயாளிகளை இனங்காணும் சேவைப் பணியில், சாயி நிறுவன வைத்திய அதிகாரிகளுடன் 5 சுகாதார உத்தியோகத்தர்களும், ஊர்ப் பிரமுகர்களும், சாயி தொண்டர்களும் சிறப்புத் தொண்டாற்றினார்கள்.

இறுதிப் பரிசோதனையும், வைத்திய ஆலோசனையும் 24-04-94 ல் கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றபோது, பொது வைத்திய நிபுணர்களான டாக்டர் திருமதி கணேசமூர்த்தி, டாக்டர் K. சிவனேசன் ஆகியோருடன் கண் வைத்திய அதிகாரியான டாக்டர் யோகராசாவும், எட்டு சுகாதார உத்தியோகத்தர்களும், எரிக் கணேஸ் தனியார் கண் பரிசோதகர்களும் பணியாற்றினார்கள். சாயி நிறுவன வைத்திய அதிகாரிகளும் அவர்களுடன் இணைந்து பணியாற்றினர்.

இச்சுகாதார சேவைப் பணியின் மூலம் பயன்பெற்றோர் விபரம்.

| | |
|---|---|
| சிகிச்சையை நாடி வந்தோர் | 590 |
| அசாதாரண குறைபாடுள்ளோர் | 392 |
| பார்வைக் குறைபாடு | 350 |
| நீரிழிவு | 32 |
| உயர்இரத்த அமுக்கம் | 38 |

ஒரே நபர் சில தடவைகள் வெவ்வேறு குறைபாடுகளுக்கு ஆளாயிருப்பதும் அவதானிக்கப்பட்டது.

இறுதி நாள் நிகழ்ச்சியின்போது சத்ய சாயி நிறுவனங்களின் மத்திய இணைப்பாளர், வடபிராந்தியத் தலைவர், சேவை இணைப்பாளர், ஆன்மீக இணைப்பாளர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இப்பணி சிறக்க தென்மராட்சி பிரதேச செயலர், கிராமசேவை உத்தியோகத்தர்கள், தென்மராட்சி கோட்டக்கல்வி அதிகாரி, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், வடபிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரும் பல்வேறு வழிகளிலும் உதவினர்.

சாவகச்சேரி சத்ய சாயி நிலையத் தலைவர் Dr. S. கருணானந்தனின் முழுமையான திட்டமிடலும், சாவகச்சேரி சாயி நிலைய அங்கத்தவர்களின் ஆயத்த வேலைகள், உணவு, தேனீர் வசதி ஆகியவற்றினாலும் இந்நிகழ்ச்சி பூரண வெற்றியடைந்தது எனலாம். அனைவர்க்கும் பகவானின் ஆசி கிட்டும்.

## ஸ்ரீ சத்ய சாயி நிலையங்கள் நடாத்திய பயிற்சித் திட்டங்கள்

i) ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின் பதவி யாளர்கட்கான முகாமைத்துவப் பயிற்சி யாழ். மத்திய சத்ய சாயிநிலை யத்தில் ஏப்பிரல் 9-ம், 10-ம் திகதி களில் இடம்பெற்றபோது 125 பேர் பங்கேற்றுப் பயன் பெற்றனர்.

ii) புதிய பாலவிகாஸ் குருமார்கட்காக யூலை 2-ம், 3-ம் திகதிகளில் ஸ்ரீ சத்ய சாயி நிலையம் தாவடியில் பயிற்சி முகாம் ஒன்று நடாத்தப்பட்டதனால் 64 பேர் கலந்து பயன்பெற்றனர்.

iii) சேவையாற்றும் குருமார்க்கான புத் தூக்க வகுப்பு ஸ்ரீ சத்ய சாயி நிலையம் தாவடியில் யூலை 25-ம், 26-ம் திகதி களில் நடாத்தப்பட்டபோது 42 குரு மார் கலந்து கொண்டனர்.

### பாலவிகாஸ்

மானிப்பாய் பகுதிச் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக சத்யா பாலர் பாடசாலை 28-01-1994 ல் ஆரம்பிக்கப்பட்டு இலவச மாக நடாத்தப்படுவதுடன் சீருடையும் அவர்கட்கு வழங்கப்படுகின்றது. இதனை மானிப்பாய் பகவான் சத்ய சாயி நிலையத் தினர் நடாத்துகின்றனர்.

உரும்பிராயில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்திற்கு 07-05-1994 ல் கோப்பாய் சத்ய சாயி பஜனை நிலைய குருமாரும், மாணவர்களுமாக சென்று நாராயணசேவை செய்ததுடன், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தினர்.

வடமராட்சியில் உள்ள சத்ய சாயி நிலை யங்களின் மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டதுடன் உரும்பிராய் பாதிப்புற்ற சிறுவர் இல்லம், உடுவில் வாழ் வகம் ஆகியவற்றிற்கு அன்பளிப்புக்களைச் செய்ததுடன் சத்ய சாயி நிலையங்கள் சில வற்றிற்கும் வருகை தந்தனர்.

## கோடி நாம ஜெப லிகித யக்ஞம்

ஒரு கோடி தடவைகள் பகவானின் நாமத்தை எழுதும் சாதனையை வடபிராந் திய சாயி நிறுவன அங்கத்தினர் ஆரம் பித்துள்ளனர். இதற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கொப்பிகளில் ஒவ்வொரு வரும் தினமும் 160 தடவை எழுதும் சாதனை 22-07-94 ல் ஆரம்பிக்கப்பட்டு பகவானின் அவதார தினமாகிய 23-11-94ல் நிறைவுறும். ஆயிரத்துக்கு மேற்பட்ட சாயி அன்பர்கள் இதனைத் தினமும் பிரார்த்த னையுடன் ஆரம்பித்து, நாமத்தை எழுதி ஆன்மீக சாதனையாகச் செய்கிறார்கள். இச்சாதனையின் நோக்கம் இறைவன் நாமத்தை எந்நேரமும் உச்சரிக்கும் பழக் கத்தை ஏற்படுத்துவதேயாகும்.

### இரத்ததானம்

அன்பு நீராகிய இரத்தத்தை வழங்கும் இரத்ததான தினத்தில் (11-09-94) வட பிராந்திய சாயி அடியார்கள் யாழ். திரு நெல்வேலி சத்ய சாயி நிலையத்தில் கூடி இரத்ததானம் செய்து தன்னலங் கருதாத சேவையை நல்கினர். 16 ஆண்களும், 11 பெண்களுமாக 27 பேர் $19\frac{1}{2}$ பைந் இரத் தத்தைத் தானம் செய்தனர்.

### வைத்தியசாலை துப்பரவுப் பணி

மந்திகை, வியாபாரிமூலை சத்ய சாயி நிலையங்கள் இணைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையிலுள்ள 4 வார்ட்டுகளைத் துப்பரவு செய்யும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இரு வாரங்களுக்கு ஒரு முறை செய்யப்படும் இப்பணியில் வார்ட்டுக்களும், சூழ உள்ள முற்றங்களும் சுத்தப்படுத்தப்படுவதைப் பலரும் வரவேற் கின்றனர்.

*ஒவ்வொரு பிராந்தியத்தினரும் தத்தமது செய்திகளைச் சுருக்கமாக ஆசிரியருக்கு தயவு செய்து அனுப்பி வைக்கவும்.*

அவதானியுங்கள் சாயி அன்பர்களே!

# அதி முக்கிய மூன்று ஆலோசனைகள்

| | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| முன்னேற்றத்திற்கு வேண்டியது | கடவுள் | கடும்உழைப்பு | கல்வி |
| போராட வேண்டியது | சுதந்திரம் | நேர்மை | நீதி |
| தவிர்க்க வேண்டியது | சோம்பல் | முகஸ்துதி | வீண்பேச்சு |
| பேண வேண்டியது | வேலையாள் | ஏழை | வயோதிபர் |
| அடக்க வேண்டியது | நாக்கு | பழக்கவழக்கம் | கோபம் |
| எதிர்கொள்ள வேண்டியது | துன்பம் | மரணம் | கஷ்டம் |
| தலைவணங்க வேண்டியது | மாதா | பிதா | குரு |
| பற்ற வேண்டியது | சத்தியம் | அகிம்சை | இறைபக்தி |
| கட்டுப்படுத்த வேண்டியது | மனம் | உடல் | ஒழுக்கம் |
| விலக்க வேண்டியது | பொறாமை | கர்வம் | குரோதம் |
| விலக வேண்டியது | சுயநலம் | தீயபழக்கம் | தகாதஆசை |
| கடைப்பிடிக்க வேண்டியது | அன்பு | மரியாதை | பொறுமை |
| கெட்டவை ஆக வேண்டியது | கொடூரம் | நன்றி மறத்தல் | ஒழுக்கக்கேடு |
| பகையாக வேண்டியது | தற்புகழ்ச்சி | பிறரை விமர்சித்தல் | பிழைகாணல் |

பிருந்தாவனத்தில் 19, 20, 21 ஜுலை 1994-ல் இடம்பெற்ற கண்காட்சியில் கண்ட சில துளிகள்.

சாயி அன்பர்களிடமிருந்து, தாம் பெற்ற அனுபவங்கள் பற்றியும், சுவாமியின் போதனைகளின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் விடயதானங்களை வரவேற்கின்றோம். விடயதானம் என்பது கதை, கட்டுரை, கவிதை, நாடகம், நறுக்குகள் எதுவுமாயிருக்கலாம். ரைபிங் தாளில் மூன்று பக்கத்திற்கு மேற்படாதிருப்பது நல்லது. விடயங்களைத் தெரிவு செய்யும் பொறுப்பும், தேவைக்கேற்பச் சீரமைக்கவும், சிறு மாற்றங்களைச் செய்யவும் வேண்டிய கடமையும் சாயி மார்க்கத்திற்கு உண்டு.

## கல்வி

கல்வி என்பது பணிவையும் ஒழுக்க நெறியையும் வளர்த்தல் வேண்டும். ஆனால் இன்று அது பெருமையையும், பொறாமையையும் உற்பத்தியாக்கித் தருகின்றது. வித்யா என்பதிலுள்ள ''வித்'' என்பது ஒளியாகும். ''யா'' என்பது தருதலைக் குறிக்கும். ஆகவே கல்வி அல்லது வித்யா என்பது மனத்திலும் நுண் மதிப் பரப்பிலுமுள்ள கரும்புள்ளிகள் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சி ஒளிரச் செய்தல் வேண்டும். புத்தக அறிவை மட்டும் இது குறிப்பிடுவதன்று. மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவு முறைகளுக்கு விளக்கமளிக்க வேண்டும். அவனுக்கும் இயற்கைக்குமுள்ள நெருங்கிய பிணைப்பையும் தெளிவு படுத்துதல் வேண்டும்.

— பாபா —

இலங்கை சத்ய சாயி நிறுவனங்களுக்காக, வடபிராந்திய சத்ய சாயி நிறுவனங்களினது இணைப்புக் குழுவினால் வெளியிடப்படும் **சாயிமார்க்கம்,** புலோலி மேற்கு, பருத்தித்துறை விநாயகர் தரும நிதிய அச்சகத்தில் 94 – 134 — 08/0644 அச்சிடப்பட்டது.